36

விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G.P.O. as a Newspaper in Ceylon

மலர் 10 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 103) 1973 மாச்சு, ஏப்ரில் | இதழ் 6.7.

**அறிவிப்பு**

காந்தீய - சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை.
விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.

## உலக அரசு

மரண அபாயத்தை விளைவிக்கும் ஆயுதங்களால் தற்போது மனிதவர்க்கத்துக்கே அறைகூவல் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித அறைகூவலுக்கு உள்ளாகியிருக்கும் மனித வர்க்கம் சரியான வழியில் செயல்படத் தவறிவிட்டால், அதற்கு மாற்றுவழி பூரண அழிவுதான். மனித அரசாங்கம் காப்பாற்றப்படுவதே உலகஅரசு அமைக்கப்படுதில தான் இருக்கிறது.

எவ்வாறு உலக அரசை அமைப்பது என்பது ஒரு முக்கியமான கேள்வி. தேசிய ஆட்சிகளை அகற்றுவதென்பது நடைமுறையில் எளிதான காரியமல்ல. உலக நாடுகளெல்லாம் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டுமென்பதற்குத் தயாராக இருக்கிறோம். சுதந்திரத்தைக் காட்டிலும் இதற்கு நாம் அதிகத்தயார். இவ்வாறு நாம்கூறுவதில் சாத்தியமற்றதோ பெருமைப்படத்தக்கதோ எதுவுமிருப்பதாக நாம் எண்ணவில்லை. தன்னலமறுப்பின்இயற்கையான வளர்ச்சி இதுதான்.

அதாவது சமுதாயத்தின் நலனுக்காக தனிமனிதன் தனது சொந்த நலனைத் தியாகம் செய்கின்றான். மாவட்டத்தின் நலனுக்காக சமூகமும், மாநிலத்தின் நலனுக்காக மாவட்டமும், நாட்டின் நலனுக்காகமாநிலமும், உலகத்தின் நலனுக்காக நாடும் தங்கள் நலனைத் தியாகம் செய்கின்றன. அர்னால்டுடாயின்பி கூறுவதாவது: ''இந்த அணுசக்தியுகத்தில் நம்முடைய ராஜதந்திரிகளிடம் நாம் எதிர்பார்க்கும் மன உணர்வு, அசோகனிடமிருந்த மனஉணர்வுதான் - அதாவது அகிம்சைதான். ஐக்கியம் இல்லாமல் நாம் எதுவும் செய்யமுடியாது. ஆனால் இந்தத் தவிர்க்கமுடியாத குறிக்கோளை வன்முறையின்மூலம் நாம் இனி அடையமுடியாது. மனித வர்க்கத்தின் ஐக்கியத் திற்காக தம்காலத்தில் பயன்படுத்தக்கூடிய ஒரே வழி மனமாற்றம் தானேயொழிய நிர்ப்பந்தம்அல்ல. தன்னுடைய காலத்தில் மனச்சாட்சியின் காரணமாக அசோகன் எந்தக் கொள்கையைப் பின் பற்றினானோ அந்தக் கொள்யை இந்த சகாப்தத்தில் மனச்சாட்சிமட்டுமல்லாது மனிதகுலம் அழிந்து விடக் கூடாதே என்ற அச்சத்தின் காரணமாகவும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவ்வாறு இம்சை பாதையானது மனித வர்க்கத்தைப் பொறுத்தவரையில் எல்லாக்காலத்துக்குமே மூடப்படுவிட்டதென்பது தெளிவாகின்றது.



எனவே தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இராணுவ பலமே முடிவான வழியென்று இருக்கும் வரை உலக அரசாங்கத்தின் மூலம், உலக அமைதியை ஸ்தாபிப்பது வீண்கனவாகவே இருக்கும். நமக்குநிரந்தர அமைதி வேண்டுமானால் பலாத்காரத்தை நாம் பூரணமாகக் கைவிட்டு விடவேண்டும். தார்மிக அதிகாரத்துடன் அமைக்கப்பட்டஒரு உலக அரசினால் மட்டும்தான் நிரந்தரமான சமர்தானத்தை ஏற்படுத்த முடியும். பெரியநாடுகளோ சிறியனவோஎல்லாவற்றிற்கும்சமத்துவமும், சகோதரத் துவமும் வழங்கக்கூடிய வகையில் அமைந்த ஒரு உலக சமஷ்டி அரசு உலக அமைதியைப் பாதுகாப்பதில் எவ்வளவோ உதவ முடியும்.

நிரந்தரமான உலக சமாதானத்தை அடைவதற்கு தற்போதுள்ள அரசியல் பொருளாதார முறைகள் சீரமைக்கப்படவேண்டும். பரவல்மயமான சிறு அமைப்புகளை நிர்மாணிக்கக்கூடிய முறையில் புனரமைக்கப்படவேண்டும். இல்லையேல் உலக சமாதானத்தை ஸ்தாபிக்கும் குறிக்கோள் கெட்டுவிடும். உலக அரசு அமைப்பதும் அபாயத்திற் குள்ளாகிவிடும், இதைத்தொடர்ந்து தீர்க்க முடியாத பல பெரிய பிரச்சனைகள் கிளம்பும். ஆகையால் நாம் பரவல் மயமான அரசியல், சமூக அமைப்புகளை வரவேற்பது தவிர்க்க முடியாதது.

— மகாத்மா காந்தி

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]

தொலை பேசி; 254

கிளிநொச்சி

காந்தி ஆண்டு 103

1973, மாச்சு

ஏப்ரில்

# சர்வோதயமும் சிரமதானமும்

சர்வோதயம் என்பது எல்லோரும் எல்லா வகையிலும் உயர்ந்து வாழ வேண்டுமென்று போதிக்கும் ஒரு கோட்பாடு. தனி ஒரு மனிதன் நன்மையை மட்டும் கவனியாது, உலகமக்கள் யாவருடைய நன்மை யையும் உன்னி அதற்கான வழிவகுத்தலே சர்வோதயத்தின் குறிக்கோள். எல்லோரும் இன்பமுற்றிருத்தல், மாசற்ற வழியில் அவ்வின்பத்தைப்பெறல், எல்லாம்சர்வோதயத்தின் குறிக்கோள்களாம்.

சர்வோதயம் ஒரு கொள்கை, அது மனத்திற் பிறந்து பதிந்த தத்துவம்; ஓர் அருவக்கருத்து. இந்தக் கனவை நனவாக்குவது எப்படி? கருத்துக்கள் எவ்வளவு அழகானவையா யிருந்தாலும் அவற்றைத் திண்ணியனவாக்குதல் எவ்வாறு? மனத்தில் எழுந்த எந்த நன்மையான கருத்திற்கும் சடப்பொருளால் உருவம் கொடுக்காவிட்டால், அந்தக்கருத்து ஊமை கண்ட கனவு போலத்தான் இருக்கும்.

''எல்லோருடைய எழுச்சியையும் நான் உண்மையில் விரும்புகிறேன். அதற்காக நான் எதுவும் செய்வேன்'' என்று சொல்லலாம். ஆனல் அந்தப் பேச்சும், அதற்குள் இருக்கும் கருத்தும் எவ்வகையில் மற்றையவர்க்கு வாழ்வில் எழுச்சியைத்தரும்? ஏன், இப்படிச் சொல்கிறவர்க்குத் தானும் அப்பேச்சும் கருத்தும் உண்மையான எழுச்சியைத் தருமா? தராது.

அதனுல்தான் எந்த இலட்சியத்தைநாம் மனதிற் கொண்டாலும், அது திண்ணிதாக உருவெடுக்க, அதாவது, மனதில் இருக்கும் உருவத்தை விட்டு வெளிவந்து, மண்ணில் நல்ல வண்ணம் உருவெடுக்க வழி செய்ய வேண்டும்.

வெறுங்கதைகள், நல்லெண்ணங்கள் மண் வாழ்க்கையை மேம்பாடடையச் செய்துவிடா. மனதில் உள்ள திட்டத்திற்கு உருக்கொடுக்க வேண்டும். அதற்கு மனமும் மண்ணும் பொருந்த வேண்டும். அவற்றைப் பொருத்தக்கூடியது நம் உடல். இந்த உடலை இறைவன் எமக்கு அழித்தது மனதிற்கானும் நல்ல தோற்றங்களுக்கு மண்ணில் திண்மையான உருக் கொடுக்கலாம். இந்தத் திண்மையான உருக் கொடுத்தல் தான் சிரமதானம்.

நான் தனியன். என்னைத்தவிர்ந்த உலகம் பல, இவ்வுடலையும் மனத்தையும் எண்ணிக்கை முறையில் பார்த்தாலும் ஒருவர்க்கோ இருவர்க்கோ தான் கொடுக்கலாம். அதுசர்வோதயமாகாது,உள்ளத்தையும் உடலையும்உலகத்தவர் யாவர்க்குமாய் பகுர்ந்தளித்தல் இலகுவன்று. ஆனல் அதற்கு ஓர் உபாயமுண்டு அந்த உபாயம் தான் சிரமதானம்.

உடலைக் கொடுக்காவிடிலும் உடல் உழைப்பை யாவர்க்கும் கொடுக்கலாம். தானமாக இதைக்கொடுக்கிறபொழுது தனி ஒருவர்க்கென்றில்லாமல் சமூகத்திற்கு, நாட்டிற்கு, உலகத்தவர்க்கு என்று கொடுத்தால் அத்தானம் பரவலாகி உலக அறமாகின்றது. ஊருக்கு உழைத்தால்தான் சிரமதானம்.

இந்த சிரம தானத்தில் அறிய ஓர் உண்மையுண்டு. சிரமதானம் மண்ணில் நடைபெறுவது. காடு வெட்டி, நாடு திருத்தி, பயிராக்கியும் இதைச்செய்யலாம். வீடு கட்டிப் பொருளாக்கியும் இதைச் செய்யலாம். இன்னும் நோயுற்றவர்க்கு உதவியும் நலிந்தவர்க்கு நலம் செய்தும், இந்தச்சிரமானத்தைப் பரவலாக்கலாம். ஏழைக்கு எழுத்தறிவித்தலும்சிரமதானமே. இவ்வாறு சிரமதானம் செய்கின்றபொழுது, மனதில் எழுந்த கருத்துகளுக்கு உடல் வடிவம் கொடுக்கும் சிரமம் நடைபெறுகின்றது. அப்பொழுது கருத்துக்களை உருவாக்கும் சிரமத்தினுல் கருத்துக்கள் மாற்றமடைகின்றன. இது மண்ணியல் வாழ்க்கையில் பரிசோதனை யாகின்றது. மனமும் மண்ணும் ஒன்றையொன்று தாக்கிப் புதிய ஒரு உலகம் தோன்றும். மனிதன் வெறும் கற்பனையாலும்வாழ முடியாது,வெறும் மண்கோட்டையாலும் வாழ முடியாது என்பதை இலகுவில் உணருவான்.

சர்வோதயம் என்ற கருத்துப் பொருளான ஓர் இலட்சியத்திற்கு உண்மையான உருவங்கொடுப்பது சிரமதானமே. இந்தச் சிரமதானப் பயிற்சி இறுதியில்சர்வோதயத்திலேயே மனத்தை ஒடுக்கும்.

— இ. இ.

# வரவு செலவு

அகில இலங்கை காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [1973 மாச்சு ஏப்ரில்] வரவு- செலவு விபரம்

வரவு

| | | |
|---|---|---|
| கையிருப்பு | 5 | 09 |
| சர்வோதயபாத்திரம் | 22 | 82 |
| சம்பத்துத்தானம் | 271 | 25 |
| அரிசி | 66 | 80 |
| கமம் | 12 | 00 |
| காந்தியம் | 2 | 00 |
| மொத்தம் | 379 | 96 |

செலவு

| | | |
|---|---|---|
| உணவு | 125 | 01 |
| பிரயாணம் | 26 | 30 |
| கோகுலம் | 22 | 75 |
| தபால் | 2 | 80 |
| கமம் | 2 | 80 |
| ஏற்ற- இறக்க | 1 | 00 |
| வெளிச்சம் | 5 | 45 |
| மாணவர் செலவு | 7 | 06 |
| வயித்தியம் | | 85 |
| சம்பளம்- கைச்செலவு | 12 | 00 |
| அச்சகம் | | 40 |
| காந்தியம் | 32 | 00 |
| சலவை | | 72 |
| கட்டடம் | 140 | 00 |
| கையிருப்பு | | 82 |
| மொத்தம் | 379 | 96 |

# இன்றைய தேவை கருத்துப் பிரசாரமே!

'மகாவீரரும் புத்தரும் அகிம்சைப் போதனை செய்த மகான்கள். ஆனால் அவர்களும் அரசர்கள் ஆயுதங்கள் கொண்டு போரிடக்கூடாதென்று கூற வில்லை. ஆனால் மகாத்மா காந்தியோ அரசுகூட வன்முறையை மேற்கொள்ளக் கூடாது என்று கூறினார். எனவே மகாத்மா காந்திஜி மாபெரும் கருத்துப் புரட்சியாளர்' என்று சர்வோதயத் தலைவர் திரு. தீரேந்திர மஜூம்தார் கூறுகிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது;

புரட்சி என்பது வேறு, செயல் திட்டம் வேறு. ஆண்டாண்டு காலமாக மக்கள் பின்பற்றி வந்த சில கருத்துக்களை மாற்றி காலத்திற்குத்தேவையான புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ள தூண்ட வேண்டும். இது பிரசார வேலை. இத்துடன் செயல் திட்டத்தை இணைக்க முடியாது. மக்கள் எல்லாரும் புதிய கருத்தை ஏற்றுக் கொள்வார்களானால் கண்மூடித் திறக்கும் நேரத்தில் புரட்சி நடந்து விடும்.

'ருஷ்யாவைப் பாருங்கள். சீனாவைப் பாருங்கள். எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. அதைப் போன்று சர்வோதயம் புரட்சி செய்ய முடிய வில்லையே' என்று பலர் கூறுகிறார்கள். கம்யூனிச சித்தாந்தம் 19ஆம் நூற்றாண்டில் உருவாகியது. ஆனால் அதைச் செயல்படுத்த 1917இல் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. ஜார் ஆட்சியின் கொடுமையின் காரணமாகத்தான் மக்கள் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். ஜார் அரசர் சிறிது புத்திசாலித்தனத்துடன் மக்கள் நலனுக்கான பணிகளை மேற் கொண்டிருந்திருப்பாரானால் ருஷ்யப் புரட்சியை மக்கள் தோற்கடித்திருப்பார்கள். இன்றும் கூட அங்கு சோஷலிஸ சமுதாயம் எங்காவது உருவாகியிருக்கிறதா? அவர்களால் என்றைக்குமே அதை உருவாக்க முடியாது. இன்று சோஷலிஸத்தின் பெயரில், பொதுவுடைமையின் பெயரில் ஒரு கூட்டத்தினரின் சர்வாதிகார ஆட்சிதான் நடக்கிறது.

எனவே நமது கருத்துக்களை நாணயத்துடன், முழு நம்பிக்கையுடன் பிரசாரம் செய்து வரவேண்டும். அதிகமாகப் போனால் சென்ற 20 ஆண்டுகளாக நாம் பிரசாரம் செய்து வருகிறோம். அதற்குள் நமது பிரசாரத்தினால் மக்கள் கவரப்படவில்லையே என்று கூறுவது சிறுகுழந்தைகள் ஏதாவது விதையை மண்ணில் முளைக்கப்போட்டு விட்டு தினமும் மண்ணைத் தோண்டி விதை முளைத்திருக்கிறதா என்று பார்ப்பதைப் போன்றதாகும்.

சர்வோதயக் கருத்துக்களைப் பிரசாரம் செய்பவர்களுக்கு அதில் ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றும் இருக்க வேண்டும். நமது வேலை மக்கள் நலப்பணி செய்வதல்ல. அது அரசாங்கம், மற்றும் இதர ஸ்தாபனங்களின் வேலை. எனவே நாம் எங்கிலும் ஒரு மாதிரி அமைப்பை உருவாக்கிக் காட்டவேண்டாமாஎன்று நினைக்கக் கூடாது. நம் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் மக்கள் சமுதாயந்தான் இப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மக்கள் இனி துப்பாக்கியின் துணை கொள்ள முடியாது. ஏனெனில் அதையெல்லாம் விட பெரிய ஆயுதங்களான அணுகுண்டு, ஜல வாயுக்குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனவேதான் காந்திஜி இனி சமுதாயத்தில் வன் முறைக்கு இடம் கிடையாது, பிரசாரத்தின் மூலம் மக்கள் மனதை மாற்றுவதன் மூலம் புதிய அமைப்பை உருவாக்க வேண்டு மென்று கூறினார். மக்கள் அராஜகத்தை ஒரு போதும் ஏற்கத்தயாரில்லை. அவர்கள் தங்கள் மதிப்பை உயர்த்திக் கொள்ள விரும்புகிறார்களே யன்றி அராஜகத்தின் மூலம் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்களே யன்றி கலகத்தை அல்ல.

மக்கள் மாற்றம் ஏற்படுத்த முடியாத வரையில் எவ்வளவு நல்ல கொள்கையையும் அமுல் செய்ய முடியாது. எனவே இன்று நாம் செய்ய வேண்டிய முதற் பணி சர்வோதயக் கருத்துக்குச் சாதகமாக மக்கள் கருத்தை உருவாக்குவதேயாகும். கொள்கைப் பிரசாரம் வேறு. அதைச் செயல் படுத்துவது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ளக் கூடாது.

---

காந்தீய - சர்வோதய

தத்துவங்களை அறிவதற்கு

கிராமராஜ்யம், சர்வோதயம்

ஆகிய பத்திரிகைகளை படியுங்கள்.

விபரங்கட்கு,

காந்தி நிலையம்

உருத்திரபுரம்

---

## தமிழகம்

தனி இதழ்: 50சதம்

ஆண்டுக்கட்டணம் : ரூபா: 6

தகவல்கட்கு;-

மேலாளர், தமிழகம்,

6, தெற்காவணி மூல வீதி

மதுரை - 1

தமிழ்நாடு.

இலங்கையில்;

காந்திநிலையம்

உருத்திரபுரம்'

# சம்பத்துத் தானம்

இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக 1973 மாச்சு, ஏப்ரில் மாதங்களில் சம்பத்துத்தானம் அளித்தவர்கள்

தெகிவளை
இரத்தினகார இடம்
திருமதி. க. க. சுப்பிரமணியம் 2 00
,, எ. அமிர்தானந்தன் 4 00
,, க கந்தசாமி 2 00
,, ம. கனகலிங்கம் 4 00
,, கா. விஸ்வேசுவரன் 1 00
,, நா. இரத்தினசிங்கம் 2 00

கல்கிசை
செல்வி. த. சிதம்பரநாதர் 2 00

இரத்மலானை
இந்துக்கல்லூரிச் சதுக்கம்
திரு. எஸ் சிவப்பிரகாசம் 1 25
,, எம். பொன்னம்பலம் 2 00
,, வி. சிங்காரம் 1 00
,, என். யோகராசா 1 90
திருமதி. எல். டி. சந்தானம் 1 00

வெள்ளவத்தை
மனிங்பிளேஸ்
திருமதி. இ. ஜெர்மையா 2 00
,, நவரத்தினம் 2 00
,, க. இராசலிங்கம் 10 00

ஹம்டன் ஒழுங்கை
திருமதி. ஜி. எஸ். பொன்னையா 2 00
,, ம. பரஞ்சோதி 1 00

அலெக்சாந்திரா வீதி
திருமதி. ச. பரமேஸ்வரன் 10 00
,, கனகராஜா 5 00
,, எஸ். கந்தையா 5 00
திரு. க. சிற்றம்பலம் 10 00

சாளி மென்ற் வீதி
திருமதி. . சின்னத்தம்பி 10 00
,, இ. சதாசிவம் 2 00

பெரேரா ஒழுங்கை
திருமதி. பி. நடராஜா 5 00
,, க. சோமசேகரம் 2 00

உலக பௌத்த
மத்தியஸ்த வீதி
திருமதி. சோ. விஸ்வநாதன் 10 00

36 ஆவது ஒழுங்கை
திருமதி. பவானந்தன் 30 00
,, அ. கைலைநாதன் 2 00
,, இ. ஆனந்தன் 5 00
திரு. எஸ் வேலாயுதபிள்ளை 1 00

47 ஆவது ஒழுங்கை
திருமதி . மாணிக்கம் 1 00
,, ச. பத்மநாதன் 2 00

விவேகானந்த அவென்யூ
செல்வன். சஞ்சீவன்- சிவலிங்கம் 5 00

காலி வீதி
திரு. சி. விவேகானந்தன் 1 00

பாமன் கட ஒழுங்கை
திருமதி. ஹைமவதி- சோமசேகரம் 10 00
,, வி. மணி 4 00
,, செ. காராளசிங்கம் 2 50

ஹரிச்சந்திரமாவத்த
திருமதி. ம. சிவசம்பு 2 00
,, ம. நடராஜா 4 00
,, ம. கனகசபை 2 00
,, ச. விக்னராஜா 1 00
,, க. குமாரசாமி 4 00
,, த. மகாதேவன் 2 00

கல்யாணி வீதி
திருமதி. இ. இரத்தினம் 4 00
,, திருநாவுக்கரசு 2 00
,, ச. வே. கந்தசாமி 2 00
,, எம். கார்த்திகேசு 2 00
,, எஸ். தணிகாசலம் 2 00
,, தா. தனபாலசிங்கம் 2 00
,, எஸ். இரத்தினம் 1 00

இராசவல்லி ஒழுங்கை
திருமதி. வேலாயுதபிள்ளை 6 00

தயா வீதி
திருமதி. செ. இரத்தினதிக்கம் 2 00

55 ஆவது ஒழுங்கை
திருமதி. இ. சற்குணநாயகம் 2 00

53 ஆவது ஒழுங்கை
திருமதி. வி. இராசமாணிக்கம் 2 00

டபிள்யூ. எ. சில்வாமாவத்த
செல்வி. வி. செல்லப்பா 4 00
திருமதி. பொ. மூலசிங்கம் 1 00
,, தா. கணேந்திரன் 5 00

புகையிரத நிலையவீதி
திரு. ஆ. குணநாயகம் 6 00

ஈ. எஸ். பெர்னாந்து மாவத்த
திரு. வி. குமாரசாமி 2 00
,, எஸ். திருநாவுக்கரசு 2 00
,, குமாரசாமி 3 00
,, நவரத்தினம் 2 00
,, என். கந்தசாமி 1 00
,, விசாகப்பெருமாள் 3 00
திருமதி. கனகசபை 1 00

விவேகானந்த வீதி
திரு. கே. பேரம்பலம் 2 00

வவசற் பிளேஸ்
திருமதி. ம. குணதிலக்க 2 00

பம்பலப்பிட்டி
திருக்குடும்பகன்னியர்மடம்
செல்வி. பவானி- சிரேஷ்டராஜா 10 00
,, யசோதா- தனபாலசிங்கம் 10 00
,, வசந்தி கந்தசாமி 10 00

கெய்க் வீதி
செல்வி. துளசி வீரசிங்கம் 1 00

மெல்போன் அவென்யூ
திருமதி. செ. சின்னத்தம்பி 2 00
,, அம்பலவாணர் 1 00
,, நடேஸ்வரி- பத்மநாதன் 1 00

டேவிட்சன்வீதி
திருமதி. பொ. காராளசிங்கம் 10 00
,, ச. இராஜலிங்கம் 20 00

மாடிவீடுகள்
திரு. விஜயகமூர்த்தி 1 00
,, சுப்பிரமணியம் 2 90

திரு. க. மயில்வாகனம்
நெற்சந்தைப் படுத்தும் சபை
மட்டக்களப்பு 10 00

திருமதி. ம. குமாரசாமி
12, மல்வத்த அவென்யூ
நுகேகொட 30 00

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.